## 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ! – தமிழ்நாட்டில்

# ரூ.1,000 கோடி முதலீடு செய்யும் ‘டிக்ஸன் டெக்னாலஜீஸ்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், டிக்ஸன் டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் அமைந்துள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மடிக்கணினி மற்றும் ஒருங்கிணைந்த கணினி உள்ளிட்ட மின்னணு உற்பத்திச் சேவைகள் திட்டம் நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, டிக்ஸன் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் சுனில் வச்சானி, துணைத் தலைவர் ப்ருத்வி வச்சானி, உதவி பொது மேலாளர் சாய் ப்ருத்விராஜ் மற்றும் செயல்பாடுகளின் தலைவர் சசிகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஏப். 11 -

**ரூ. 1,000 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், டிக்ஸன் டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனம் ஒரகடம் இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், மடிக்கணினி மற்றும் ஒருங்கிணைந்த கணினி உள்ளிட்ட மின்னணு உற்பத்திச் சேவைகள் திட்டம் நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், டிக்ஸன் டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் அமைந்துள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மடிக்கணினி மற்றும் ஒருங்கிணைந்த கணினி உள்ளிட்ட மின்னணு உற்பத்திச்சேவைகள் திட்டம் நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**உற்பத்தி - ஏற்றுமதியில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு!**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு 2024-25ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதம் வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி இதுவாகும்.

**மின்னணு உற்பத்தி சேவைகள் திட்டம்!**

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட்டு, 10,14,368 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 32 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

**டிக்ஸன் டெக்னாலஜீஸ் லிமிடெட்.**

1993ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட டிக்ஸன் டெக்னாலஜீஸ் நிறுவனம், மின்னணு நுகர் பொருட்கள், விளக்குகள் மற்றும் கைபேசி சந்தைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. சாம்சங், சியோமி, மோட்டாரோலா, போட், பேனசானிக், TCL டெக்னாலஜீஸ், ஒன்ப்ளஸ் போன்ற நிறுவனங்களுக்கு ஒப்பந்த முறையில், அவர்களின் பொருட்களை உற்பத்தி செய்து வழங்கிவருகிறது. இந்நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் அமைந்துள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், மடிக்கணினி மற்றும் ஒருங்கிணைந்த கணினி உள்ளிட்ட மின்னணு உற்பத்திச் சேவைகள் திட்டத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.

அதன்படி, மடிக்கணினி (*Laptop*) மற்றும் ஒருங்கிணைந்த கணினி (*All in One PC*) உள்ளிட்ட மின்னணு உற்பத்திச் சேவைகள் (*Electronics Manufacturing Services*) திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் அமைந்துள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில் நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு முகவான்மையான தமிழ்நாடு தொழில் வழிகாட்டி (*Guidance*) நிறுவனத்திற்கும் டிக்ஸன் டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், காஞ்சிபுரம் மற்றும் அம்மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – அதிகாரிகள் – தொழிலதிபர்கள் பங்கேற்பு!**

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, டிக்ஸன் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் சுனில் வச்சானி, துணைத் தலைவர் ப்ருத்வி வச்சானி, உதவி பொது மேலாளர் சாய் ப்ருத்விராஜ் மற்றும், செயல்பாடுகளின் தலைவர் சசி குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் தொடர்ந்த

# ‘வக்பு’ திருத்தச் சட்டத்திற்கு எதிரான வழக்கு!

## உச்சநீதிமன்றத்தில் 15–ஆம் தேதி விசாரணை!

புதுடெல்லி, ஏப். 11 -

நாடு முழுவதும் வக்பு சொத்துக்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிர்வாகத்தில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வுகாணும் நோக்கில் கடந்த 1995ம் ஆண்டின் வக்பு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் மசோதா மற்றும் முசல்மான் வக்பு (ரத்து) மசோதா 2024 ஆகிய இரண்டையும் மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்தார்.



இதன்படி நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிந்துரைத்த திருத்தங்களுடன் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவுக்கு தி.மு.க., காங்கிரஸ் உள்பட இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. வக்பு திருத்த மசோதா மீதான விவாதத்துக்கு 8 மணி நேரம் ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் 12 மணி நேரம் வரை நீட்டிக்கப்பட்டது.

நள்ளிரவு 2 மணியளவில் இந்த மசோதா வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடந்தது. இதில், மசோதாவுக்கு ஆதரவாக 288 உறுப்பினர்களும், எதிராக 232 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கடந்த 5ந்தேதி மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார். அதனால் அது சட்ட அந்தஸ்து பெற்றது. இதற்கிடையே, வக்பு திருத்த சட்டம் அரசியல் சாசனப்படி செல்லாது என்று அறிவிக்கக்கோரி, 10க்கு மேற்பட்ட மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தி.மு.க., அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம், ஜாமியத் உலமா ஐ ஹிந்த் உள்ளிட்ட அமைப்புகளும் பல்வேறு கட்சித் தலைவர்கள் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், அம்மனுக்கள் தொடர்பாக ஒன்றிய அரசு நேற்று உச்சநீதிமன்றத்தில் ‘கேவியட்’ மனு தாக்கல் செய்தது. வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீது ஏதேனும் உத்தரவு பிறப்பிப்பதாக இருந்தால், தனது தரப்பு கருத்தை கேட்க வேண்டும் என்று வலியுறுத்தி, இந்த மனுவை தாக்கல் செய்தது.

வக்பு திருத்த சட்டங்களுக்கு எதிரான மனுக்கள், 15ந்தேதி விசாரணைக்கு வரக்கூடும் என்று சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 7ந்தேதி, ஜாமியத் உலமா ஐ ஹிந்த் அமைப்பு தரப்பு மூத்த வழக்கறிஞர் கபில் சிபலிடம் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா தலைமையிலான அமர்வு, 15ஆம் தேதி மனுக்களை விசாரணைக்கு பட்டியலிடுவதாக உறுதி அளித்தது.

---

## முதன் முறையாக நடைபெறும் மாநில அளவிலான

# மகளிர் சுய உதவிக் குழு மகளிருக்கான பன்முக கலாச்சாரப் போட்டிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, ஏப். 11 –

“பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்” என்பதைக் கருத்தில் கொண்டு, பெண்கள் பொருளாதாரத்தில் சுயசார்பு பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது, இன்று மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

“மகளிரின் வளர்ச்சியே மாநிலத்தின் வளர்ச்சி” என்பதை குறிக்கோளாக கொண்டு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளில் செயல்பட்டு வரும் 3,29,039 மகளிர் சுய உதவி குழுக்களில் 37,76,575 மகளிரும், நகர பகுதிகளில் செயல்பட்டு வரும் 1,47,430 மகளிர் சுய உதவி குழுக்களில் 15,98,144 மகளிரும் தங்களது உற்பத்தி பொருட்களின் மூலம் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



2024–25ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69% உண்மை வளர்ச்சி வீதத்துடன் (Real Economic Growth Rate) இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2023–24ஆம் ஆண்டில் ரூ.15,71,368 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 2024–25ஆம் ஆண்டில் ரூ.17,23,698 கோடியாக உயர்ந்துள்ளதாக ஒன்றியப் புள்ளி யியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இணையதளத்தில் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மகளிர் சுய உதவி குழு மகளிரும் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

சுய உதவிக் குழு மகளிரின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அவர்களின் மன வளத்தையும், உடல் உறுதியையும் மேம்படுத்தவும், ஒற்றுமையை வளர்த்திடவும், சுகாதாரத்தினை பேணி காக்கும் வகையிலும் கால்பந்து, கோகோ, கபடி, குழுக் கோலம் (ரங்கோலி) மற்றும் கயிறு இழுத்தல் ஆகிய பன்முக கலாச்சாரப் போட்டி கள் ஊராட்சி/வட்டாரம்/மாவட்டம் மற்றும் 8 மண்டல அளவில் நடத்தி முடிக்கப்பட்டன.

குறிப்பாக கால்பந்து, கோகோ, கபடி போன்ற போட்டிகள் முதன்முறையாக சுய உதவிக் குழு மகளிரிடையே நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக மாவட்ட / மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 24 மாவட்டங்களைச் சேர்ந்த 39 சுய உதவிக் குழுக்களில் உள்ள 400 மகளிர் பங்கு பெறும் கால்பந்து, கோகோ, கபடி, குழுக் கோலம் (ரங்கோலி) மற்றும் கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் சென்னை நேரு பூங்கா மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.4.2025) சென்னை, நேரு பூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் முதன் முறையாக நடைபெறும் மாநில அளவிலான, மகளிர் சுய உதவிக் குழு மகளிருக்கான பன்முக கலாச்சாரப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் கலந்து கொண்டனர்.

---

## நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்காமல்

# இப்போதைய நிலையே தொடர வேண்டும்!

## ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ கட்டுரையை மேற்கோள் காட்டி– முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.11–

ஒன்றுபட்ட இந்தியாவிற்காக நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்காமல் இப்போதைய நிலையே தொடர வேண்டும் என்பது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் வெளியான கட்டுரை தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



For united India, freeze Lok Sabha

It's necessary to complete the Census. But principle of proportionality has become unworkable due to assymetric demographic changes

ARVIND P DATAR

**மூத்த வழக்கறிஞர் அரவிந்த் பி.தாதார் அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் முக்கியமான தொரு கட்டுரையை நேற்று (9.4.2025) எழுதியுள்ளார்.**

**வட மாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் இடையே மக்கள்தொகையில் சமமின்மை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்காமல் இப்போதைய நிலையே தொடர வேண்டியது மிக அவசியமாகும்.**

**நாட்டின் கூட்டாட்சியியல் நல்லுறவே அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்பதால், மக்கள்தொகைக்கேற்ப மக்களவைத் தொகுதிகள் எனும் வழிமுறையைக் கண்ணை மூடிக்கொண்டு செயல்படுத்தலாகாது. அனைத்துப் பகுதிகளுக்கும் இடையே நியாயமான முறையில் அதிகாரம் பரவி இருப்பதில்தான் இந்தியாவின் முன்னேற்றம் அடங்கியுள்ளது.**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**